பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஞூ தை மீ 17 உ புதன்கிழமை (30-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 64

# போரை நிறுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபடமாட்டாது!

## வெளியுறவுச் செயலர் துபே கொழும்பில் சூசகமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 30

"இலங்கையில் இடம்பெற்று வரும் தற்போதைய சண்டையை முடிவுக்குக் கொண்டுவருவதில் இந்தியா எந்தக் கட்டத்திலும் பங்காற்றும் நிலையில் இல்லை."

— இந்திய வெளியுறவு அமைச்சர் வித்யா சரண் சுக்லாவுடன் கொழும்பு வந்திருக்கும் வெளியுறவுச் செயலர் முஷ்குந்த் துபே இவ்வாறு கூறியதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் மட்டப் பேச்சுக்கள் நேற்று முடிவுற்ற பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழ் நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது குறித்து இரு நாடுகளும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய அமைச்சர்கள் பேச்சு

கொழும்பு, ஜன. 30

இந்திய வெளியுறவு அமைச்சர் வித்யா சரண் சுக்லா நேற்றுக்காலை இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்தை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இரு அமைச்சர்களும் சுமார் ஒருமணித்தியாலம் அதிகாரிகளின் உதவியின்றித் தனித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அடுத்த இரண்டரை மணித்தியாலங்கள் அதிகாரிகளின் துணையுடன் இரு அமைச்சர்களும் பேசினர்.

இந்தியக் குழுவில் வெளியுறவுச் செயலாளர் முஷ்குந்த் துபே, இலங்கைக்குப் பொறுப்பான அதிகாரி திரு. ரஞ்சன் அபயங்கார், இந்தியத் தூதர் நாகேந்திரநாத்ஜா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இலங்கைக் குழுவில் வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்னா, ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (உ-எ)

## கேரதீவு பஸ் மீது ஹெலி நேற்று சூடு!

### இளம் பெண் படுகாயம்

பருத்தித்துறையில் இருந்து கேரதீவு நோக்கிப் புறப்பட்ட பயணிகள் பஸ்மீது நேற்று மாலை 5 மணியளவில் ஹெலி தாக்குதல் நடத்தியது.

கொடிகாமத்துக்கும் மீசாலைக்கும் இடையில் ராமாகோவிலடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வல்வெட்டி வன்னியம்மன் கோவிலடியைச் சேர்ந்த பாஸ்கரன் மதிவதனி [23வயது] என்னும் இளம் குடும்பப் பெண் படுகாயமடைந்தார்.

அவரது கையிலிருந்த 5 மாதக்குழந்தை காயம் ஏதுமின்றித் தப்பிக்கொண்டது.

பஸ் மறைவான ஓரிடத்தில் நிறுத்தப்பட்டதும், பயணிகள் பலரும் ஓடித் தப்பிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இளம் பெண் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## வல்வைச் சேதங்கள்; அரச அதிபர் அதிர்ச்சி!

ஸ்ரீலங்கா விமானப் படையினரின் அகோர குண்டு வீச்சுக்கு இலக்காகி அழிந்து போய் கிடக்கும் வல்வெட்டித்துறைப் பகுதியை நேற்று யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேரில் சென்று பார்வையிட்டார்.

உடைமைகள் முழுவதையும் இழந்து நிர்க்கதியான மக்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

சேதங்களைப் பார்வையிட்ட அரச அதிபர் பெரும் அதிர்ச்சி அடைந்தார்.

வல்வையில் 90 வீதமான கட்டடங்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்த அரச அதிபர், அழிவுகளின் விபரங்களைத் திரட்டுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளதாக நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-5-6)

## முச்சந்தி முரளி



அப்ப...... சண்டையைத் தாண்டிவிட்டு வேடிக்கை பார்க்கவே உங்க வந்தவையள்......!

## திருமலையிலும் விமானக் குண்டு வீச்சு

திருகோணமலை மாவட்டம், பன்மதவாச்சியில் விமானப் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தினர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் ஆயுதப்படையினர் அப்பகுதியில் நடத்திய தரைத் தாக்குதலில் வீடுகள் பல சேதமடைந்தன என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## மன்னாரில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 30

நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் உள்ள கஜுவத்தை, சிலாவத்தை இராணுவ முகாம்களில் இருந்து படையினர் வெளியேறிய போது விடுதலைப் புலிகள் அவர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலை அடுத்து படையினர் முகாமுக்கு பின்வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## முல்லைத்தீவு மோதலில் மேஜர் காந்தன் உட்பட நால்வர் வீரமரணம்

முல்லைத்தீவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் மேஜர் காந்தன் (வீரசிங்கம் திலீப்குமார் — திரியாய்) உட்பட நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

கடந்த ஞாயிறன்று மாலை 5.30 மணியளவில வெடிவைத்த கல்லு பகுதியில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகள் மீது படையினர் மறைந்திருந்து தாக்கியபோது இம்மோதல் இடம்பெற்றது.

கப்டன் புதிதா (முருகன் சந்திரகுமார் — கொழும்பு), லெப்டினன்ட் ரஞ்சன் (செல்வராசா கருணதாஸ்—ஒட்டுசுட்டான்) மதுவன் (கனகசபை கருணாநிதி — கொக்கிளாய்) ஆகிய போராளிகளும் இச்சம்பவத்தில் வீரமரணமடைந்தனர்.

இந்த மோதலின் போது படையினர் தரப்பில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. [உ]

## அடம்பனில் வான்தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 30

மன்னார் மாவட்டம் அடம்பனில் மூன்று பொம்மர் விமானங்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

ஐந்து குண்டுகள் வீசப்பட்டன. ஒரு வீடு முற்றாக சேதமடைந்ததாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

## மாணவன் டயர் போட்டு எரிப்பு

யாழ்ப்பாணம், ஜன: 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனியன்று பழுகாமத்திலிருந்து களுவாஞ்சிக்குடிக்குச் சென்ற மாமாங்கம் தேவகலைவன் (வயது 22) என்ற மாணவன் களுவாஞ்சிக்குடி இராணுவத்தினரால் சுடப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இரத்தம் அவசரம்! யாழ். ஆஸ்பத்திரிக்கு

யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இரத்தவங்கியில் 'ஓ' குறூப் இரத்தம் சிறிதளவேனும் இல்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

விபத்தில் சிக்கிய சிறுவன் ஒருவனுக்கு 'ஓ' குறூப் இரத்தம் மிக அவசரமாகத் தேவைப்படுவதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## இராணுவம் சுட்டதில் 3 தமிழர் உயிரிழப்பு

### வாழைச்சேனையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 30

கடந்த வெள்ளியன்று வாழைச்சேனையில் உள்ள கண்ணன் கிராமப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பெண்மணி, ஒரு சிறுமி உட்பட புணாணைப் பகுதியைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர், இருவர் படுகாயமடைந்தனர்.

மூன்று பிள்ளைகளின் தாயான மயில்வாகனம் புஷ்பராணி (வயது 30), நான்கு பிள்ளைகளின் தந்தையான பீற்றர் செகராசா (வயது38), சுப்பிரமணியம் வள்ளி (வயது

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை துறை திருத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 30

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறை திருத்த வேலைகள் நேற்று ஆரம்பமாகின.

இறங்குதுறை சேதமடைந்துள்ளதால் கப்பலில் கொண்டு வரப்படும் பொருள்களை விரைவாக இறக்க முடியாதநிலை இருந்து வருவது தெரிந்ததே.

இறங்குதுறை திருத்த வேலைகளை யாழ். அரச அதிபர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். (ஒ-6)

## 6 ஆம் ஆண்டு அனுமதி; பெப்.16 இல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். மாவட்டத்தில் தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பிரபல்ய பாடசாலைகளுக்கும் ஆறாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 16 ஆம் திகதி நடைபெறும்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

அதிபர்கள் தமக்குத் தேவைப்படும் வினாத்தாள்களின் எண்ணிக்கை விவரங்களை தத்தமது கோட்டக் கல்வி அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே வேளை —

தேசிய பாடசாலைகளான யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கான ஆறாம் ஆண்டு அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ 5)

## இலவச பாட நூல்கள்; ஒரு தொகுதி வந்தது

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாட நூல்களில் ஒரு தொகுதி 'லங்கா சிறி' கப்பலில் வந்துள்ளது.

இன்று லொறிகள் மூலமாக பாட நூல்கள் பருத்தித்துறையிலிருந்து எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை—

இலவசப் பாட நூல்களை அடுத்த மாத இறுதிக்குள் சகல மாணவர்களுக்கும் விநியோகிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாம் சம்பந்தப்பட்ட சகலரையும் பணித்துள்ளதாகக் கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக உடன்படிக்கை; இருதரப்பு இணக்கம்

கொழும்பு, ஜன. 30

இலங்கை-இந்திய வர்த்தக உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளும் விஷயம் குறித்து இலங்கை-இந்திய வெளியுறவு அமைச்சர்களின் முதல் சுற்றுப் பேச்சின் போது இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தேயிலை கூட்டுச் சிற்பனைத் திட்டம், மன்னார் வளைகுடாவில் எண்ணெய் வள ஆராய்ச்சி ஆகிய விஷயங்களும் பேச்சுக்களின் போது ஆராயப் பட்டதாகத் தெரிகிறது. (உ-எ)

# ஹமீத், ரஞ்சன், ஜே.ஆர். சுக்லாவுடன் சந்திப்பு

இந்திய அமைச்சர் சுக்லா அமைச்சர்கள் சாகுல் ஹமீது, ரஞ்சன் விஜேரத்னா, முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆகியோரை நேற்றுப் பிற்பகல் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

திரு சுக்லா இன்று ஜனாதிபதி பிரேமதாசா, பிரதமர் டி. பி. விஜேதுங்கா, எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, சபாநாயகர் எம். எச். முஹம்மது ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார். (உ-எ)

# தமிழ்க் குழுக்கள் மகஜர்

வெளியுறவு அமைச்சர் சுக்லாவை ஏழு தமிழ்க் குழுக்கள் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தன.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும் என்று மகஜரில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

தற்போதைய அதிகாரப் பரவலாக்கல் திட்டம் விரிவு படுத்தப்படுவதுடன், தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படவேண்டும் என்றும் மகஜரில் கோரப்பட்டிருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர் எல் எவ்., ஈ. என். டி. எல். எவ், புளொட், ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை உட்பட ஏழு அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளே அமைச்சர் சுக்லாவைச் சந்தித்தனர்.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும்படியும்—

தமிழர் தாயகத்தில் சிங்களவர் குடியேற்றத்தை நிறுத்தும்படியும்—

வடக்கு - கிழக்கில் படையினர் தொடர்ந்து நடத்தி வரும் விமானத் தாக்குதல்களை நிறுத்துமாறும்—

ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்துமாறு இக்குழுக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் சுக்லாவைக் கேட்டதாகக் கூறப்பட்டது. (உ-எ-6)

# ரூ. $2\frac{1}{4}$ கோடி உதவி இந்தியா வழங்கும்

வடக்கு - கிழக்கு அகதிகள் பராமரிப்புக்கென சுமார் 2 கோடியே 25 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை இந்தியா வழங்கவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதராலயத்திடமே இந்த உதவி வழங்கப்பட உள்ளது.

பணமாகவும், பொருளாகவும் இவ்வுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

# இளம் குடும்பஸ்தர் தேடிக் கொண்ட முடிவு!

யாழ்ப்பாணம், ஜன. 30

யுத்தச் சூழ்நிலையால் தொழில் இழந்திருந்த குடும்பஸ்தர் ஒருவர், உணவுத் தட்டுப்பாட்டினால் மேலும் பாதிக்கப்பட்டார்.

எனினும் குடும்பத்திற்குச் சாப்பாடு போடுவதற்காகத் தமது இயல்புக்கு அதிகமாகக் கடன் வாங்கினார்.

கடன்காரர்கள் பணத்தைத் திரும்பத் தருமாறு நெருக்கினார்கள். கடனைக் கொடுக்க என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடினார்.

வேறு வழி தெரியவில்லை; நச்சு விதைகளை உட்கொண்டு உயிரைப் போக்கினார்.

நவாலியைச் சேர்ந்த 27 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு தனக்கு முடிவைத் தேடிக்கொண்டவர் ஆவார். நேற்று முன்தினம் (திங்கள்) இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. (அ-15)


## தேவை

அலுவலகத்தில் பலவித உடலுழைப்புப் பணிகள் செய்த அனுபவம் உள்ள ஒருவர் உடனடியாக வேலைக்குத் தேவை. பூந்தோட்ட வேலைகளைத் தாமாக விருப்பத்துடன் செய்யக் கூடியவர்கள் மட்டும் நேரில் வரவும்.

உதயன்.
நாவலர் வீதி யாழ்ப்பாணம்.



தைப்பூசத் தினத்தை முன்னிட்டு

## புதிய வகுப்புகள்

| | |
|---|---|
| பாடங்கள்:- | மிருதங்கம், வயலின், நடனம். |
| இடம் :- | சரஸ்வதி இசைக் கல்லூரி<br>2, நாச்சிமார் கோவிலடி,<br>யாழ்ப்பாணம்.<br>[ஸ்ரீ ரகு ராம ஜெயம்] |
| காலம் :- | இன்று (30-01-90) புதன்கிழமை<br>மாலை 5.00 மணி தொடக்கம்<br>6.00 மணி வரை. |
| (15409) | |


# அமெ. விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள்

புதுடில்லி, ஜன. 30

பிலிப்பீன்ஸில் உள்ள அமெரிக்கத் தளத்தில் இருந்து வளைகுடா போரில் ஈடுபடச் செல்லும் அமெரிக்கப் போர் விமானங்கள், பம்பாய் விமான நிலையத்தில் இறங்கி எரிபொருளை நிரப்பிச் செல்வதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ் விமானங்களில் ஆயுதங்கள் எதுவும் எடுத்துச் செல்லப்படவில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக் சேனி அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்தே, இந்திய அரசு இதற்கு அனுமதி வழங்கியதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# இந்திய அரசின் முடிவுக்கு ஈராக் ஆட்சேபம்

அமெரிக்க போர் விமானங்கள் பம்பாயில் எரிபொருள் நிரப்ப அனுமதி வழங்கியது குறித்து ஈராக் தனது ஆட்சேபனையை இந்திய அரசிடம் நேற்று உத்தியோக பூர்வமாகத் தெரிவித்துக் கொண்டது.

இந்தியாவுடனான நற்புறவைப் பார்க்கையில் அமெரிக்க விமானங்கள் எரிபொருள் நிரப்ப அனுமதி வழங்கியதை ஈராக்கினால் ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக புதுடில்லியில் உள்ள ஈராக்கிய தூதர் இந்திய வெளியுறவு அமைச்சிடம் தெரிவித்தார்.

மருந்துகள், மனிதாபிமான உதவிகள், அகதிகளை வெளியேற்றுவது போன்ற நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படுத்தப் படும் விமானங்களுக்குத் தான் எரிபொருள் நிரப்பும் வசதி வழங்கப்பட்டதாக இந்திய அரசு பதிலளித்து உள்ளது.

இந்திரா காங்கிரஸ், ஜனதாதள், காங்கிரஸ் எஸ், இடதுசாரிக் கட்சிகள் இந்திய அரசை இதற்காக கண்டித்துள்ளன.

# காலம் பிந்திய 'ஞானம்'

குவைத் படையெடுப்பைத் தொடர்ந்து பக்தாத்தில் பணயமாக வைக்கப்பட்டிருந்த சுமார் 5 ஆயிரம் மேற்கு நாட்டவர்களை விடுவிக்காமல் இருந்திருப்பின், பன்னாட்டுப் படைகள் தற்போதைய யுத்தத்தை ஆரம்பித்திருக்கா என்று ஜனாதிபதி சதாம் ஹுசேன் கூறினார்.

# தொய்வு நோயாளருக்கு யோகாசன சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன. 30

தொய்வு (ஆஸ்மா) நோயாளர்களின் அவஸ்தையைப் போக்க நல்லூர் சாந்தியோகா நிலையம் உதவ உள்ளது.

தொய்வு நோயாளருக்கான விசேட யோகாசன வகுப்புகளை தினமும் நல்லூரில் உள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இலவச வகுப்புக்களை யோகாசனக் கலாநிதி சுவாமி ஸ்ரீசிதானந்த யோகி காலை 7 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடத்துவார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொய்வு நோய்க்கான மருந்துகள் இல்லை. அதனால் அந்நோயாளர்கள் அவஸ்தைப்படுகின்றனர். அவர்களுக்கு யோக சிகிச்சை அளிக்கும் முகமாகவே யோகாசன வகுப்புகள் நடத்தப்பட உள்ளதாக சாந்தி யோகா நிலையத்தலைவர் திரு க. கேசவன் தெரிவித்தார். (அ)

# போராளி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 30

சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கணேஷ் (அன்பழகன்—சண்டிலிப்பாய்) என்ற போராளி நேற்று முன்தினம் காலையில் மரணமானார். (உ)

# போரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இணக்கம் கண்டன,

1987 இல் செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் இன்றைய காலகட்டத்திற்கு எவ்வாறு பொருந்தும் என்பது பற்றிய அம்சங்களும் விவாதிக்கப்பட்டன.

இந்தப் பேச்சுக்களில் உடன்பாடு காணப்பட்ட விஷயங்கள் குறித்து அமைச்சர் சுக்லா ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் இன்று (புதன்) பேச்சுக்கள் நடத்துவார்.

அதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிடும் என்றார் — அவர்

இதேசமயம் நேற்றைய பேச்சுக்கள் குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் —

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சமாதானத்தைக் கொண்டுவருவது தொடர்பாக அரசின் கொள்கை பற்றி இந்திய தரப்பினருக்கு விளக்கமளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிகளுடன் நடைபெற்று வரும் சண்டை குறித்தும்—

இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட உறவின் எல்லா அம்சங்கள் பற்றியும் விவாதிக்கப் பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

# பரவலாக ஹெலி சூடு

யாழ்ப்பாணம், ஜன. 30

குடாநாடு மற்றும் தென்மராட்சியின் சில பகுதிகளில் நேற்றும் ஹெலித் தாக்குதல் இடம்பெற்றது.

அநேக இடங்களில் வீதிகளில் சென்றோர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

அச்சுவேலியில், ஆவரங்கால் - வல்லை வீதியிலும் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது. (ஒ-15)

# விபத்தில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 30

நீர்வேலி, சிறுப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் 11 வயதுச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்

வயாவிளானைச் சேர்ந்த யேசுதாசன் அருள்குமார் என்னும் இந்தச் சிறுவன் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான்

லொறி ஒன்றைக் கடந்து செல்ல முற்பட்ட சமயமே இந்த விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது. (ஒ-15)

# இராணுவம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

8) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்,

மயில்வாகனம் மல்லிகா (வயது 26) என்ற குடும்பப் பெண்ணும் மூன்று பிள்ளைகளின் தந்தையான தில்லைநாயகம் (வயது 34) என்பவரும் படுகாயமுற்றனர். (உ)

## சுக்லாவுடன் நடத்திய பேச்சு:

# விவரங்களை வெளியிட கருணாநிதி மறுப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து வெளியுறவு அமைச்சர் சுக்லாவுடன் கடந்த திங்கள் மதுரையில் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை வெளியிட முதலமைச்சர் கருணாநிதி நேற்று மறுத்து விட்டார்.

இப்போது அந்த விவரங்களை வெளியிட முடியாதிருப்பதாக அவர் சொன்னார்.

ஆயினும், சுக்லாவுடன் நடத்திய பேச்சுக்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒரு புதிய அணுகு முறையை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் அமைந்தன என்றும் திரு. கருணாநிதி சொன்னார். (உ-எ)

# எதிரணிப் பிரமுகர்கள் மீது சதிக் குற்றச்சாட்டு

சென்னை, ஜன. 30

வீதி மறியல் போராட்டம் தொடர்பாக தமிழகத்தில் கைதாகி காவலில் உள்ள இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க எம்பிக்கள், எம்.எல்.ஏக்கள் ஆகியோரில் சிலர் மீது சதிக் குற்றம், கொலைமுயற்சி, வன்முறையைத் தூண்டியது ஆகிய வழக்குகள் தாக்கல் செய்யப் படலாம்.

முதலமைச்சர் கருணாநிதி இதனை நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப் பட்ட 26 ஆயிரத்துக்கு அதிகமானோரில் 24 ஆயிரம் பேர் வரை விடுவிக்கப்பட இருப்பதாகவும் முதலமைச்சர் சொன்னார்.

சுமார் ஆயிரம் பேர் மீது திட்டவட்டமான குற்றச்சாட்டுகள் இருப்பதால் அவர்கள் காவலில் தொடர்ந்து வைக்கப்பட்டிருப்பர் என்றும் கருணாநிதி சொன்னார். (உ-எ)

# கப்பலில் தபால்கள்

யாழ்ப்பாணம், ஜன. 30

'லங்காசிறி' கப்பல் மூலம் வந்துள்ள தபாற் பொதிகளை எடுத்து வருவதற்காக யாழ். பிரதம தபாலக அதிகாரிகள் நேற்று பருத்தித்துறைக்கு சென்றிருந்தனர். (ஓ-6)

# பிரெஞ்சு அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம், ஜன. 30

பிரெஞ்சு மருத்துவக் குழுவான எம். எஸ். எவ்வின் இலங்கைப் பிரதிநிதி திரு. பிலிப் தலைமையில், மூவர் அடங்கிய குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக் குழுவினர் இங்குள்ள மருந்து மற்றும் உணவு நிலைமைகள் குறித்து நேரில் அவதானித்து தெரிந்துகொள்ளவே வந்துள்ளனர் என அறிய வந்தது. (ஓ-6)

# ஓய்வூதியம் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன. 30

போயா தினமான போதிலும் நேற்று இலங்கை வங்கியின் யாழ். ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

பெருமளவு எண்ணிக்கையானோர் நேற்று ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். [ஓ-6]


## மரண அறிவித்தல்கள்

### லிகோரி அலன்

40 A, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வாசஞ் செய்தவரும், செல்வராணியின் கணவனும், மங்கம், மடோனா, மல்கியா, சேரா என்போரின் அன்புத் தந்தையுமாகிய அலன் மகிமைக்குள் பிரவேசித்தார். அன்னாரது பூதவுடல் இன்று புதன்கிழமை பி. ப. 2-30 மணிவரை அன்னாரின் வீட்டில் வைக்கப்பட்டுப் பின், பி. ப. 3-30 மணிக்கு அடக்க ஆராதனைக்காக, இலங்கை பெந்தகொஸ்தே சபைச் சாலை, 111, கண்டி வீதி, சுண்டுக்குளிக்கு எடுத்துச் செல்லப்படும். அடக்கம் பெந்தெகொஸ்தே சபை மயானம், வசந்தபுரத்தில் இடம்பெறும்.

இலங்கை பெந்தெகொஸ்தே சபை, சுண்டுக்குளி. — தகவல்: பொணிவென்ஸர் சகோதரன்.

(15410)

### திருமதி இராமனாதர் சின்னம்மா

நெடுந்திவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவிலில் வசித்தவருமாகிய திருமதி இராமனாதர் சின்னம்மா 29-01-1991 இல் காலமாகிவிட்டார்.

இவர் திருமதிகள் பசுபதி புஸ்பவதி, சுந்தரலிங்கம் கனகம்மா, அருளப்பு யோகம்மா [ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி], வரதராசா சேதுப்பிள்ளை [ஆசிரியை, ஸ்கந்தவரோதயா கந்தரோடை], சிவஞானம் பார்வதி, குலசிங்கம் புவனேஸ்வரி [ஆசிரியை, நல்லூர் மங்கையர்க்கரசி], குகராசா லலிதாதேவி [திருநெல்வேலி மிருக வைத்திய பிராந்திய அலுவலகம்], திருவாளர்கள் இ. கோபால் [ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்], இ. பேரம்பலம் [கொழும்பு இறைவரித் திணைக்களம்], இ. துரைராசா [ஆசிரியர், பரி. சாவிஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-01-1991 பிற்பகல் 5 மணியளவில் உடுவிலில் நடைபெறும்.

டச்சு றோட், சுற்றொக்குவனை, உடுவில். — தகவல்: க. வரதராசா

(15707)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதயன்

## பிராயச்சித்தமாக பிரசித்தம் தேவை

பேசாலையிலும், மடுவிலும் உள்ள அகதிகளுக்கு உணவும், மருந்தும் கிடைக்காமல் அவர்கள் அல்லற்படும் ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் இரு தின பிரத்தியேக ... தங்கியுள்ள அகதி முகாம்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவே பராமரித்து வருகிறது.

அகதிகளுக்கென உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற வாகனங்களை விமானப்படையினர் தாக்கினர். அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக — உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படும் வரை — தமது பணிகளை ஐ.நா. அகதிகள் பிரிவினர் தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர்.

சர்வதேச [illegible] இன்று தமிழ் அகதிகளுக்கான உணவுப் பொருள்களைப் பாதுகாப்புடன் எடுத்து வர முடியாத பயங்கர நிலை இங்கு நிலவுகிறது. அவ்வாறாயின் சாதாரண மக்கள், அரச அதிகாரிகள் அல்லது வியாபாரிகள் உணவுப் பொருள்களைத் தெருமுனையில் இருந்து வடக்கே கொண்டு வருவது எப்படி?

ஆனால் தமிழர் பிரதேசங்களுக்கு உணவு, மருந்து அனுப்பாமல் அரசு தமிழர்களை மறைமுகமாகக் கொல்கிறது என்பது வவுனியாவுக்கு அப்பாலும் [illegible] கப்பிட்டிக்கு அப்பாலும் எவருக்கும் தெரியாதே! அரச படைகளுக்கும், புலிகளுக்கும் இடையில் சண்டை நடந்தாலும் தமிழர் சுபீட்சமாக வாழ்ந்து வருகிறார்கள் என்று சாதாரண சிங்களவர் நினைக்கிறார்கள்! அந்த வகையில் அந்தப் பக்கத்து மக்கள் உண்மையிலிருந்து இருளில் மூழ்கடிக்கப்படுகிறார்கள்.

தென்னிலங்கையிலேயே இவ்வாறாயின் தமிழர் அவலம் வெளிநாடுகளில் எவ்வாறு மூடிமறைக்கப்படுகிறது என்பதை எண்ணவும் பார்க்க வேண்டியதில்லை.

ஐ.நா. அகதிகள் பிரிவுக்கு நடந்த கதி, அது மேற்கொண்டிருக்கும் ஆட்சேப நடவடிக்கை என்பன வெளியுலகில் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும். ஐ.நா. அகதிகள் பிரிவின் இலங்கைக் கிளைத் தலைவர் இதனைத் தமது தலைமைக்கு அறிவித்திருக்கும் அறிவித்திருப்பார் என்பது வரவேற்கத்தக்கது. தலைமையகம் [illegible] விருந்து உலக நாடுகளுக்குத் துல்லியமாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

இராணுவ ரீதியாக மட்டுமன்றி, பொருளாதார, உளவியல் ரீதியாகவும் தமிழர்களைத் தாக்கி அவர்களை [illegible] போராட்டத்தை அடக்கி ஒடுக்க கொழும்பு அரசு தீவிரமாக முயன்று வருகின்றது — என்ற விவகாரம் உலகத்துக்கு எடுத்துக் காட்டப்பட வேண்டும்.

தனது ஆட்சேப நடவடிக்கை மூலம் இருபதாயிரம் அகதிகள் அவலப்படுவதற்குப் பிராயச்சித்தமாக, ஐ.நா. அகதிகள் பிரிவு உண்மையை உலகுக்கு பிரசித்தப்படுத்த வேண்டும் என மனிதாபிமானத்தின் பேரால் இதயங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

# யாழ். மாநகரசபைப் பகுதியில் நெருப்புக்காய்ச்சல் பரவுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ் மாநகரசபை எல்லைப் பகுதிக்குள் நெருப்புக் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது. கடந்த இரண்டு மாத காலத்தில் 80 பேர் வரை நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் கொதிக்க வைத்து தண்ணீரை கொதிக்க வைத்துப் பயன்படுத்தாததே நோய் பரவக் காரணம் என்று சுகாதாரப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

திருநெல்வேலியில் இருந்து வரும் குடிதண்ணீர் விநியோகம் கடந்த ஆறுமாத காலமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. மின்சார இல்லை. [illegible] விறகு விலை அதிகரிப்பினாலும் பெரும்பாலானவர்கள் கிணற்று நீரை கொதிக்க வைக்காது அருந்துவதுமே சுற்றோதைய சுகாதார சீர்கேட்டுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகரசபைப் பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 14 பேரும், ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 25ஆம் திகதி வரை 5 பேரும் நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு ஆளாகியிருக்கின்றனர்.

நெருப்புக் காய்ச்சலைத் தவிர மலேரியா, மூளைக் காய்ச்சல் ஆகியவையும் கணிசமான அளவு பரவி வருகின்றன. இவற்றுக்குப் பிரதான காரணம் நுளம்புப் பெருக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## இன்று தைப்பூசம்

யாழ்ப்பாணம், ஜன. 30

இன்று புதன்கிழமை தைப்பூசத் திருநாளாகும். அதனையொட்டி குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் பொங்கலும், முருகன் ஆலயங்களில் தைப்பூசத் திருவிழாவும் நடைபெறும்.

இணுவில் கந்தசாமி கோவிலில் வருடாந்தம் சிறப்புற நடைபெறும் தைப்பூச மஞ்சத் திருவிழா இம்முறையும் பக்திபூர்வமாக இடம்பெறும்.

## ஆசிரியர்களின் இவ்வருட இடமாற்றம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஜன. 30

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களின் இவ்வருட இடமாற்றங்கள் தாமதமாகவே மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

மேற்கண்ட தகவலை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் திரு. சந்திரராஜா தெரிவித்தார்.

வழமையாக இடமாற்றங்கோரும் விண்ணப்பங்கள் செப்டம்பர் மாதத்துக்கு முன்பே கிடைத்துவிடும். இம்முறை தபால் சீர்கேட்டால் விண்ணப்பங்கள் வந்து சேரவில்லை. இதனால் ஜனவரியில் இந்த இடமாற்றம் மேற்கொள்ள முடியாதுள்ளது.

தாமதமாகவே இடமாற்றத் திட்டம் அமுல் செய்யப்படும் — என்றார் அவர். (இ-3)

## தாரணிக்கு பூநகரியில் அஞ்சலி

பூநகரி, ஜன. 30

சட்டுவனில் ஸ்ரீலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த மேஜர் தாரணிக்கு பூநகரி வாடியடியில் இடம்பெற்ற வைபவத்தில் கண்ணீர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பூநகரி பள்ளமேடு பிரதேச பொறுப்பாளர் சாம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

மேஜர் தாரணி (மதிவதனி) பூநகரியில் அத்தாய் என்ற இடத்தைச் சேர்ந்தவர். பூநகரி மகா வித்தியாலய மாணவ மாணவிகளும் நல்லூர் அ.த.க. பாடசாலை மாணவ மாணவிகளும் இந்த அஞ்சலியில் கலந்து கொண்டனர்.

பிரதேசப் பொறுப்பாளர் சாம், கிராமியப் பொறுப்பாளர் இக்பால், மன்னார் விளையாட்டு உத்தியோகத்தர் செல்வம் உட்படப் பலர் உரையாற்றினர். (இ-ரி)

### அணைக்கட்டு உடைப்பு:

## பல்லவராயன்கட்டில் மக்கள் வெளியேறினர்

பூநகரிப் பகுதியில் சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக பல்லவராயன் கட்டு குளம் நிரம்பி அணைக்கட்டு உடைப்பெடுத்து வெள்ளம் பரவியதால் பல்லவராயன்கட்டு, கிராமம் [illegible] போன்ற இடங்களில் இருந்து மக்கள் வெளியேறி உள்ளனர்.

பல இடங்களில் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்துள்ளது.

பல்லவராயன்கட்டில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு இரண்டு வார நிவாரணத்துக்கான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. வீ. எஸ். கனகரத்தினம் இந்த அகதிகளை நேரடியாகப் பார்வையிட்டு அவர்களுக்கான உதவிகளை வழங்கினார். (தீ-ரி)

## தீட்சை

கொழும்புத்துறை, ஜன. 30

கைதடி யசோதிநிலையினரின் இலத்தின் ஆதரவுடன் இலவச ஸ்ரீ நடேசப் பெருமான் ஆலயத்தில் இலவச சமயப் பிரவேச தீட்சை இன்று புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறும். (த-80)

## மண்ணெண்ணெய் பிடிபட்டது

யாழ்ப்பாணம், ஜன. 30

பருத்தித்துறை, [illegible] தெருமூடி மடத்தடிப் பகுதி வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 லீட்டர் மண்ணெண்ணெய் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு அப்பகுதி மக்களுக்குப் பங்கிட்டு விநியோகிக்கப்பட்டது. (இ-15)

## 22 நோயாளர் கொழும்பு பயணம்

கொழும்பில் அவசர சிகிச்சை பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட 22 நோயாளர்கள் 'குமண' கப்பல் மூலம் கொழும்பு புறப்பட்டனர்.

பருத்தித்துறையில் இருந்து இக்கப்பல் காலை [illegible] கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. (இ-ரி)

## எருவுடன் டிராக்டரில் ஏறிய நகைகள்

புளியங்கூடல், ஜன. 30

எருக்குவியலின் கீழ் டின் ஒன்றில் போட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நகைகள் எருவுடன் அள்ளப்பட்டு டிராக்டர் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டன. எரு கொட்டுச் செல்லப்பட்ட பின்னர் நகைகள் அடங்கிய 'டின்'னை எருவின் கீழ் மறைத்து வைத்த வீட்டுக்காரருக்கு ஞாபகம் வந்ததாம்.

டிராக்டரைத் துரத்திச் சென்ற வீட்டுக்காரர்கள், அதனை வழிமறித்து நகைகளை மீட்டனர்.

இந்தச் சம்பவம் அண்மையில் புங்குடுதீவு இறுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் அடிக்கடி இடம்பெயருவதால் களவுக்குப் பயந்து நகைகளைப் புதைத்து வைக்கிறார்கள். இப்படிப் புதைக்கப்பட்ட நகைகளே எருவுடன் ஏற்றப்பட்டு பின்னர் மீட்கப்பட்டுள்ளன. (இ-135)

## சுக்கிர உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 30

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் தை மாதம் தொடக்கம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுக்கிரவார உற்சவமும் — பிரதி மாதமும் வரும் பூர்வபக்க ஏகாதசியில் சந்தான கோபாலர் உற்சவமும் அறிமுகப்பட்டு வருவதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

## ஆலயத்தில் பேர்ஸ் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்தவரின் கைப்பையிலிருந்த பேர்ஸ் அபகரிக்கப்பட்டது.

நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்வி நா. மணப்பதிப்பிள்ளை என்பவரே பேர்ஸை பறிகொடுத்தவராவர். [illegible] பணத்துடன், [illegible] பேர்ஸில் இருந்ததாம். (இ-15)

## போர் முடியும் காலம் கடவுளுக்கே தெரியும் என்கிறார் சதாம்

பக்தாத், ஜன. 30

வளைகுடாப் போர் எப்போது முடிவடையும்?

"அது கடவுள் ஒருவருக்கு மட்டும் தான் தெரியும்" — என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் பதிலளித்தார்.

வளைகுடாப் போர் ஆரம்பித்த பின்னர் ஜனாதிபதி சதாம் ஹுசேன் மேற்கு நாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கு முதன் முறையாக அளித்த பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

பக்தாத்தில் தங்கியிருந்து போர்முனைச் செய்திகளை அனுப்ப ஈராக் அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு மேலை நாட்டு டி.வி. நிறுவனம், அமெரிக்க சி.என்.என். அமைப்பாகும்.

அதன் செய்தியாளர் பீட்டர் ஆர்னெட் ஜனாதிபதி சதாம் ஹுசேனை பேட்டி கண்டார். பேட்டி 90 நிமிடங்கள் நீடித்தது. போரில் இருதரப்பினரும் நிறைய இரத்தம் சிந்த வேண்டி ஏற்படும். ஆனால் இறுதியில் ஈராக்கே வெற்றி வாகை சூடும் என்று ஜனாதிபதி ஹுசேன் சொன்னார்.

## 'சில்க் வோர்ம்' ஏவுகணை அழிப்பதில் தீவிரம்!

சீனத் தயாரிப்பான 'சில்க் வோர்ம்' ஏவுகணைகளை அழிப்பதில் பன்னாட்டுப் போர் விமானங்கள் ஈடுபட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

சில்க் வோர்ம் ஏவுகணைகள் கப்பல்களை தாக்கி அழிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

ஈரானுடனான 8 ஆண்டுகால யுத்தத்தில் ஈராக் சில்க் வோர்ம் ஏவுகணைகளைப் பயன்படுத்தியது.

பன்னாட்டுப் படைகள் கடல்மார்க்கமாக குவைத்தில் இறங்கும்போது ஈராக் 'சில்க் வோர்ம்' ஏவுகணைகளையே பயன்படுத்தும் என்று கூறப்படுகிறது.

## கடலில் மசகு எண்ணெய் கொட்டப்படுவது நிறுத்தம்

குவைத் எண்ணெய்க் குதங்களில் இருந்து வளைகுடாக் கடலில் மசகு எண்ணெய் கொட்டப்படுவது பெரும்பாலும் நின்றுவிட்டதாக அமெரிக்க நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

எண்ணெய்க் குழாய் மீது அமெரிக்க போர் விமானங்கள் நடத்திய லேசர் குண்டுத் தாக்குதல் காரணமாக இது சாத்தியமாயிற்று என்று சொல்லப்பட்டது.

வளைகுடாக் கடலில் பரவியுள்ள எண்ணெய்ப் படலம் சுமார் 55 கிலோ மீற்றர் நீளமும் 15 கிலோ மீற்றர் அகலமும் கொண்டதாக அமைந்திருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

## ஈராக் - ஈரான் இடையில் இரகசிய உடன்பாடு?

வளைகுடாப் போர் குறித்து ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே இரகசிய உடன்பாடு ஏதும் இருக்கிறதா? என்ற சந்தேகத்தை லண்டன் பத்திரிகைகள் நேற்று எழுப்பின.

ஈராக்கிய விமானங்கள் ஈரானில் தரையிறங்கி வரும் செய்திகள் பற்றி கருத்து வெளியிடுகையிலேயே இந்த சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

## ஈரானில் உள்ள விமானங்கள் மீண்டும் போரில் ஈடுபடுமா?

"ஈரானில் தரையிறங்கியுள்ள ஈராக் போர் விமானங்கள் வளைகுடாப் போரில் மீண்டும் ஈடுபடுத்தப்படுமா?" என்று ஈராக் ஜனாதிபதியிடம் கேட்டபோது —

"இது விஷயத்தில் ஈரான் அரசு எடுக்கும் முடிவை ஈராக் கௌரவிக்கும்" — என்று அவர் பதிலளித்தார்.

## 20 ஈராக்கியர் தஞ்சம்

20 ஈராக்கியர்கள் எல்லை கடந்து ஈரானைப் போய்ச் சேர்ந்தனர் என்றும் பின்னர் அவர்கள் அரசியல் தஞ்சம் கோரினர் என்றும் தெஹ்ரானில் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பிரெஞ்சு அரசுக்குள் லடாய்! அமைச்சர் இராஜினாமா!!

பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் நேற்று ராஜினாமாச் செய்தார். உள்துறை அமைச்சரை புதிய பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி மித்தரண்ட் நியமித்தார்.

வளைகுடாப் போர் தொடர்பாக ஜனாதிபதி மித்தரண்டின் கொள்கை பிடிக்காத காரணத்தினால் தான் பாதுகாப்பு அமைச்சர் ராஜினாமாச் செய்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

"பிரெஞ்சுப் படைகள் குவைத்தில் நிலைகொண்டுள்ள ஈராக்கிய படைகளை மட்டும் தான் தாக்கும்; ஈராக் மீது தாக்குதல் நடத்துவதில் ஈடுபடாது" — என்று பதவி விலகிய பாதுகாப்பு அமைச்சர் முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால் "இக்கருத்து பிழையானது; ஈராக் மீதும் பிரெஞ்சுப் படைகள் தாக்குதல் நடத்தும்" — என்று ஜனாதிபதி மித்தரண்ட் அறிவித்தார்.

இப்போது பிரெஞ்சுப் படைகள் ஈராக் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கருத்து வேறுபாடு பாதுகாப்பு அமைச்சரின் ராஜினாமாவில் முடிந்திருக்கிறது.

★ இரசாயன ஆயுதங்கள் பாதுகாப்பாக உள்ளன என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தெரிவித்தார். ஆனால் தற்போதைய போரில் அவற்றைப் பாவிக்க வேண்டிய நிலை ஏற்படாது என்றும் அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### சித்ராலயா ஸ்ருடியோ

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளை புகைப்படங்களுக்கும் சித்திராலயா 351, கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின்வீதியில், கம்பன் கோட்டத்திற்கு முன்பாக) (சி/5681)

### ரைப்பிங் சேவை

தமிழ்-ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ்-ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றது. Fudo, 89/17, மின்சார நிலையவீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக) (சி/5684)

### பிரத்தியேக வகுப்பு

G. C. E. A/L பிரத்தியேக வகுப்புகள் வீடுகளுக்குச் சென்று நடத்தப்படுகிறது. பொருளியல், கணக்கியல், வர்த்தகம், அளவையியல் பல்கலைக்கழக பட்டதாரிகளால் கற்பிக்கப்படுகிறது. தொடர்பு: S. சிவா, 155, அரசடி வீதி, கந்தர்மடம். (15404)

### இடமாற்றம்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டி ஊழியர் சங்கம் 01-02-91ல் இருந்து இல, 55 வேம்படி வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (15701)

### கம்பியூட்டர் பயிற்சி

Diploma in Computer Programming Basic-Language பயிற்சி, Diploma in Pharmasit பயிற்சி ஆகியன மீண்டும் ஆரம்பமாகின்றன. சேர விரும்புவோர் 02-02-91திற்கு முன்பாக நேரில் வரவும். Jaffna Central Academy (Govt, Regd.) உரும்பராய்ச் சந்தி, (நகைமாளிகை அருகாமை) உரும்பராய். (15646)

### விற்பனைக்கு

கடைக்கதவு, நிலை, ஒரு பனைமரம், சீனாகை, வீட்டுத்தளவாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 07, கைலாச பிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (15703)

எம்பிட்டம்பிற்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார். மெற்றல் வேக்ஸ், கைலாச பிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (15704)

### கிளீனிக்

தமிழ், ஆங்கில ரைப்பிங், தொலைபேசேவைகளுக்கும், அடையாள அட்டைகளை லமினேட் செய்வதற்கும், மற்றும் போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கும், கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (15592)

## கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in BASIC LANGUAGE

**ஆரம்பம்: இன்று 10.30 a.m.**
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

**02-02-1991 10.30 a.m.**
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
மிகவும் விளக்கமான முறையில்பயிற்சி அளிக்கப்படும்.
கட்டணம் பகுதி பகுதியாகச் செலுத்தலாம்.
சேரும் போது செலுத்தவேண்டியது 500/- மட்டுமே

மேலதிக விவரங்களுக்கு:-




**UNIKCO COMPUTER CENTRE**
37, Clock Tower Road, JAFFNA.
(இலிங்கன் சந்திக்கு வடக்கே கன்னா மேல்மாடி)
(சி-5696)

## Jaffna College Institute of Technology

Vaddukoddai

எமது பயிற்சி நெறிகள் யாவும் மாசி மாதம் 6ஆந் திகதி (06-02-1991) புதன்கிழமை ஆரம்பமாகின்றன.

விண்ணப்பதாரிகள் அனைவரும் இத்தினத்தில் தொழில்நுட்ப கல்லூரியில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தூர இடங்களில் இருந்து விண்ணப்பித்த மாணவர்களின் வசதி கருதி விண்ணப்ப முடிவு திகதி 6ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்.

(சி-5699)

## அறிவித்தல்

இலங்கை வங்கியின், மாங்குளம் கிளை தனது வாடிக்கையாளருக்கான சேவைகளை, கிளிநொச்சிக் கிளையில் வைத்து 06-02-1991 முதல் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரம்: முற்பகல் 9 மணி
தொடக்கம் 10 மணி வரை

வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் வங்கியின் புதிய ஏற்பாட்டை கவனத்திற்கு எடுத்து வழமை போல் ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
வன்னிப்பிராந்தியம்,
வவுனியா.

(சி-5780)




(C/5702)

## ஆறாம் மாத கண்ணீரஞ்சலி



வீர ஜனனம்: 18 — 12 — 1971

வீர மரணம்: 05 — 03 — 1990

**செல்வராஜா இராயேந்திரகுமார் (பாபு)**
2ஆம் லெப்டினன்ட் (டயஸ்)
(கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, உயர்தர மாணவன்)

அன்பின் நண்பா!
பண்பாய் பணிவாய் பாய்ந்திடும் புலியாய்
மாவீரன் என நீ சொர்க்கம் புகுந்தாய்
உன் புகழுடல் எம் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்

உயர்தர மாணவர் மன்றம்,
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(15702)

## தரை இறங்கிய விமானங்கள் குறித்து ஈரானுக்கு எச்சரிக்கை

ஈரானில் தரை இறங்கிய ஈராக்கிய போர் விமானங்கள் வளைகுடாப்போரில் ஈடுபட அனுமதிக்கப்படக்கூடாது என்று அமெரிக்கா ஈரானை எச்சரித்து உள்ளது.

ஈரானில் உள்ள ஈராக்கிய விமானங்களின் நடமாட்டம் குறித்து அமெரிக்கா தீவிர கண்காணிப்பு செலுத்தி வரும் என்று வாஷிங்டனில் தெரிவிக்கப்பட்டது.

★ ஈராக்கில் உள்ள விமான ஓடுபாதைகளில் 90சதவீத மானவை பன்னாட்டுப்பேர் விமானங்களின் குண்டு வீச்சுத் தாக்குதலினால் சேதமடையவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

## இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் ஈரானில் இறங்கின

ஈரானில் தரையிறங்கியுள்ள ஈராக்கிய விமானங்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டிவிட்டன என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

தரையிறங்கிய விமானங்களில் பெரும்பாலானவை நவீன ரக போர் விமானங்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை — தரையிறங்கிய அனைத்து ஈராக் விமானங்களும் வளைகுடாப் போர் முடியும் வரை ஈரானிலேயே தடுத்து வைக்கப்படும் என்று ஈரான், ஐ.நா. பொதுச் செயலாளருக்கு உறுதி அளித்துள்ளது.

## இஸ்ரவேல் மீது 7 ஆவது தாக்குதல்

சவூதி அரேபியா மீது ஆறாவது தடவையும், இஸ்ரவேல் மீது ஏழாவது தடவையும் ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

திங்கட்கிழமை இடம் பெற்ற இத் தாக்குதல்களின் போது உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. 'பேட்ரியட்' ஏவுகணைகள் அவற்றை இடைமறித்து அழித்து விட்டன என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சதாமின் மனைவி லாம்பியாவில்?

லுஸாக்கா, ஜன. 30

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் மனைவி சஜிதா, தனது குழந்தையுடன் ஸாம்பியாவில் தங்கி இருப்பதாக அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கிறிஸ்டன் ரெம்போ பொதுக்கூட்டம் ஒன்றில் அறிவித்தார்.

சாம்பியாவின் ஜனாதிபதி கென்னத் கவுண்டா இதனை மறுத்திருந்தபோதும், திரு. கிறிஸ்டன் ரெம்போ பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் சொன்னதாவது:

"உங்கள் எல்லோருக்கும் ஓர் உண்மையைச் சொல்லப் போகின்றேன். தனது குழந்தை, இரு சகோதரிகள் மற்றும் மூன்று மெய்ப்பாதுகாவலர்கள் ஆகியோரின் துணையோடு சதாமின் மனைவி லுஸாக்காவில் அரச மாளிகை ஒன்றில் தங்கியிருக்கிறார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் அந்த மாளிகையை காவல் புரிந்து வருகின்றனர். திரு. கவுண்டா எமது நாட்டை தேவையற்ற நெருக்கடிக்குள் மாட்டியிருக்கிறார்." இப்படி திரு. ரெம்போ சொன்னார்.

ஸாம்பிய ஜனாதிபதி கவுண்டா, சதாம் ஹுசேனின் நெருங்கிய நண்பர். சதாமின் பெயரை லுஸாக்கா நகரவீதி ஒன்றுக்கு கவுண்டா வைத்திருக்கிறார். வளைகுடாப் போர் ஆரம்பிக்கும் முன்னர் கென்னத் கவுண்டா, பக்தாத் சென்று சதாம் ஹுசேனைச் சந்தித்து இருந்தார்.

யாழ். மாவட்டத் தேசிய பாடசாலைகள்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
வேம்படி மகளிர் கல்லூரி

## ஆண்டு 6 பிரவேசப் பரீட்சை - 1991

01. பரீட்சைத்தினம்: 9-2-91 சனிக்கிழமை காலை 9.00 மணி
02. பரீட்சைக்குரிய பிரவேசப் பத்திரங்களை உரிய பாடசாலை அலுவலகத்தில் 05-02-1991 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

செல்வி இ. இராஜரத்தினம், அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி
க. சி. குகதாசன், அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
30-01-91
(சி/5701)

## உடன் தேவை

காலால் மிதிக்கக்கூடிய பிளேட்டின் மெஷின் (1/4 அல்லது 1/3 அளவு) உடன் தேவை. வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

உதயன் மே/பா. இல: 176
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-1-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org